பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
04 02 2025 **TUESDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பெல்ஜியம் நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள திரு. **Bart De Wever**–க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்
2. நாட்டின் மின்உற்பத்தி திறனை அடுத்த 7 ஆண்டுகளில் 874 ஜிகாவாட்டாக உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
3. பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் பூட்டான் மன்னர் திரு. **Jigme Khesar Namgyel Wang Chuck** இன்று பங்கேற்றார்.
4. தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் சூழலியல் மன்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
5. அர்ஜென்டினாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>><<<<<**

பெல்ஜியம் நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள திரு. **Bart De Wever**–க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியா – பெல்ஜியம் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த புதிய பிரதமருடன் இணைந்து பணியாற்றுவதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக கூறியுள்ளார்.

மேலும் சர்வதேச விவகாரங்களில் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்தழைப்புகளை வலுப்படுத்தவும் உறுதிபூண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ள திரு. நரேந்திர மோடி, திரு. **Bart De Wever**–ரின் பதவிக்காலம் வெற்றிகரமாக அமையவும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

நாடாளுமன்றத்தில் குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது, மக்களவையில் நடைபெற்று வரும் விவாதத்திற்கு பதிலளித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மாலை உரையாற்றுகிறார்.

இதுகுறித்து நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலன் குறித்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, பிரதமர் திரு. நரேந்திர மோடியும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை மனதில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**>>>>><<<<<**

இலங்கையின் சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Vijitha Herath,** அந்நாட்டு அரசு மற்றும் மக்களுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இருநாட்டு மக்களுக்கும் பலனளிக்கக்கூடிய பன்முக ஒத்துழைப்புகளை முன்னெடுத்துச் செல்ல இந்தியா உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

காசி தமிழ் சங்கமத்திற்கான ஏற்பாடுகள் குறித்து தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன், புதுதில்லியில் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

பண்டைக்காலத்திலிருந்து தமிழகத்திற்கும் காசிக்கும் இடையிலான தொடர்புகளை போற்றும் விதமாக நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் பிரதிநிதிகளுக்கான வசதிகள் உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடுகள் குறித்து அமைச்சர் அப்போது கேட்டறிந்தார்.

மத்திய கல்வி அமைச்சக கூடுதல் செயலாளர் திரு. எஸ்.கே. பர்ன்வால், பிரஸார் பாரதி தலைமைச் செயலதிகாரி திரு. கௌரவ் துவிவேதி உள்ளிட்ட அதிகாரிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டுக்கான காசி தமிழ் சங்கமம், வாரணாசியில் வரும் 15ஆம் தேதி தொடங்கி 24ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதில் தமிழகத்திலிருந்து சுமார் ஆயிரத்து 200 பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

>>>>><<<<<

நாட்டின் மின்உற்பத்தி திறனை 2031-32ஆம் ஆண்டுக்குள் 874 ஜிகாவாட்டாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் நாயக் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்துள்ள அவர், நிலக்கரியை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரமும் இதில் அடங்கும் என்று தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் நாளை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

70 உறுப்பினர்கள் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கான தேர்தலில் பிஜேபி, ஆம் ஆத்மி, காங்கிரஸ் மற்றும் சுயேட்சைகள் உட்பட மொத்தம் 699 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதில் சுமார் 1 கோடியே 56 லட்சம் வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தவுள்ளனர்.

சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள அமிர்த தோட்டம் நாளை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்கள், வாக்குச்சாவடிக்கு செல்ல ஏதுவாக தில்லியில் உள்ள அனைத்து வழித்தடங்களிலும் மெட்ரோ ரயில்கள் நாளை காலை 4 மணியிலிருந்து இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தலும் நாளை நடைபெறவுள்ளது.

இத்தேர்தலில் திமுக, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உட்பட 46 பேர் களத்தில் உள்ளனர்.

இடைத்தேர்தலை ஒட்டி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மூர்த்தி 40 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

சுற்றுச்சூழலை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் சூழலியல் மன்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று காலநிலை உச்சிமாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், வெப்பஅலை பாதிப்பு காலங்களில் மாநில பேரிடர் நிதியிலிருந்து தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்படுவதுடன் **ORS** கரைசல் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஸ்டாலின் 49 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்று பூட்டான் மன்னர் திரு. **Jigme Khesar Namgyel Wang Chuck** பங்கேற்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வழிபட்டார்.

கும்பமேளாவின் நிறைவு நாளான வரும் 26ஆம் தேதி மூத்த குடிமக்கள் மற்றும் செவித்திறன் குறைபாடு உடையவர்களுக்கான சிறப்பு முகாமிற்கு, உத்தரபிரதேச அரசு ஏற்பாடு செய்துள்ளது.

அன்றயை தினம் 2 ஆயிரம் மூத்த குடிமக்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இலவச மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**>>>>><<<<<**

மணிப்பூர் மாநிலத்தில் தடை செய்யப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்த 9 தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் இம்பால் கிழக்கு மாவட்டத்தில் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள், கையெறி குண்டு உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் செல்ஃபோன்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**>>>>><<<<<**

ஐ.நா சபையின் இந்த ஆண்டிற்கான பட்ஜெட்டிற்கு இந்தியா 37 புள்ளி ஆறு நான்கு மில்லியன் டாலர் தொகையை வழங்கியுள்ளது.

இந்த தொகை கடந்த 31ஆம் தேதி வழங்கப்பட்டதாக ஐ.நா பொதுச்செயலாளரின் செய்தி தொடர்பாளர் திரு. **Stephen Dujarric** தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஐ.நா பொதுச்சபை தலைவர் திரு. **Philemon Yang** இன்று புதுதில்லி வந்துள்ளார்.

**>>>>><<<<<**

அர்ஜென்டினாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 5-7, 6-1, 6-0 என்ற செட்கணக்கில் அர்ஜென்டினாவின் **Renzo Olivo-**வை வென்றார்.

**>>>>><<<<<**

உத்ராகண்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டியின் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் பிரிவில் **Satish Kumar – AAdya Variyath** இணை தங்கம் வென்றது.

பேட்மிண்டன் போட்டியின் மகளிர் பிரிவில் அன்மோல்கர்ப் தங்கப்பதக்கம் வென்றார்.

**>>>>><<<<<**

கூடைப்பந்து போட்டியின் ஆடவர் பிரிவில் தமிழக அணி இன்று நடைபெற்ற ஆட்டத்தில் 21-16 என்ற புள்ளிக்கக்கில் தெலங்கானா அணியை வென்று, வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

**>>>>><<<<<**